RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2121

OPEN ACCESS

# எட்டுத்தொகையில் தமிழர் வாழ்க்கையும் சமூகக் கட்டமைப்பும்

**பொ. அகத்திய பாலா [அ, *], க. சரவணன்**

[அ] தமிழாய்வுத்துறை, அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), கரூர்-639005, தமிழ்நாடு, இந்தியா.

# Lifestyle and Social Construct of Tamil People in Ettuthogai

**B. Agathiyabala [a, *], K. Saravanan [a]**

[a] Research Department of Tamil, Government Arts College (Autonomous), (Affiliated to Bharathidasan University), Karur-639005, Tamil Nadu, India

* Corresponding Author: agathiyabalaab@gmail.com

Received: 27-08-2022
Revised: 17-10-2022
Accepted: 24-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

Ettuthogai is the first anthology in Sangam literature. The text gives a clear idea about the ancient Tamil people. Sangam literary texts are about the Sangam period and about the excellence of Tamil language. Tamil people are leading a better life from 2nd century B.C. The fact is that the anthology was composed by the writers who are genuine in their writings and there is no imaginary scenes in the anthology. The writers of the anthology believed that the book will be useful for all generation. The book highlights the ways of life and its qualities, the social restrictions and the various stages of Sangam era. That is why, even after thousands of years, Tamil people and people of other countries who are interested in Tamil language, learns the anthologies that are composed during Sangam era. Even though the Sangha literature is written in Tamil language, the life style illustrated in this anthology is much more common to the human race. Confusions, dilemmas, and mental problems are the very common problems in the present era. Overall, this article explains about the lifestyle and social construct of Sangam period people.

**Keywords:** Society Literature, Biology, Social Structure, Internal, External Analysis

## முன்னுரை

தமிழினம் எப்படியான ஒரு பண்பட்ட வாழ்வியலைக் கொண்டது என்பதற்கு சான்றே, சங்க இலக்கியங்கள் ஆகும். இவை படிக்கப் படிக்க நாள்தோறும் நிகழும் சூழலுக்கு ஏற்ப இந்நூலின் கருத்துக்கள் நமது வாழ்வியல் நிகழ்வுகளை வழி நடத்தி செல்லுகின்றன. அதனை இன்றைய தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் நோக்கில் "எட்டுத்தொகையில் தமிழர் வாழ்வும் சமூகக்கட்டமைப்பும்" என்னும் தலைப்பின் கீழ் சமூகம் சொற் பொருள் உருவாக்கம், சமூகக் கட்டமைப்பு, வாழ்வியல் பகுப்பு, வாழ்வியல் கூறுகள் போன்ற பொருண்மைகளின் அடிப்படையில் இக்கட்டுரை ஆராயப்பட உள்ளது.

## ஆய்வுமுறை

எட்டுத்தொகையின் வழித் தமிழர்களின் வாழ்வியல் கூறுகளை ஆராயும் நோக்கில் இக்கட்டுரையின் பொருண்மை தேர்வு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக சமூகம் சொற்பொருள்கள் ஆராயப்பட்டன. சங்க இலக்கியத்தில் ஒருப்பகுதியாகிய எட்டுத்தொகை நூல்களில் உள்ள தமிழர்களின் சமூகக்கட்டமைப்பு எவ்வாறு அமைந்திருந்தது என்பது குறித்து பல்வேறு நிலைகளில்

ஆராயப்பட்டுள்ளது. வாழ்வியல் பகுப்பு முறைகள் என்னும் தலைப்பின் கீழ் அக வாழ்க்கை என்றால் என்ன என்பது குறித்தும் புறவாழ்க்கை என்பது யாது என்பது குறித்து இதில் ஆராயப்பட்டுள்ளது. மேலும், தமிழர்களின் வாழ்வியல் கூறுகளாக பண்பாடு, வாழ்வியல் விழுமியங்கள் மனித இனத்தின் அடிப்படை தேவைகள் போன்றவை ஆராயப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் தகவல்கள் அனைத்தும் மொழியின் பயனான "எட்டுத்தொகை" நூல்கள் நமது வாழ்வியலைக் காக்கும் பெட்டகம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## சமூகம் சொற்பொருள் விளக்கம்

சமூகம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்டகாலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்திக்கொள்ளும் அமைப்பாகும் (Avinashilingam, 1968).

## தமிழர் வாழ்க்கையும் சமூகக்கட்டமைப்பும்

ஒரு தேசம் சிறந்து விளங்குவதற்கு காரணம் தனிமனித ஒழுக்கத்தில் தொடங்கி தேசம் வரையில் விரிகிறது. தனிமனிதன் பண்புகளிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்குவதற்கு, அவன் வாழும் சூழல் காரணம். வாழ்க்கை ஒருவருக்கு சிறப்பாக அமைய சமூகக்கட்டமைப்பே அடித்தளமாகிறது. இச்சமூகத்தைக் கட்டமைப்பதற்கு கற்களாக வாழ்வியல் சூழலும் வாழ்வியல் கூறுகளும் பயன்படுகின்றன.

உலகம் முழுவதும் பல்வேறு வேறுபாடுகள் காணப்படுவதற்கு வாழ்வியல் கூறுகளே காரணம் எனலாம். தமிழர்கள் சிறந்த வாழ்வியல் கூறுகளை கட்டமைத்து அதன் வழியே வாழ்வியல் விடுமியங்களை சமூகக் கட்டமைப்பில் இரண்டாகக் கலந்து வாழ்ந்தவர்கள் என்றால் மிகையில்லை. அதற்கான சான்று, "அணு குண்டு துளைக்காத ரஷ்ய மாளிகையில் திருக்குறள்" பாதுகாக்கப்படுவதாகும். இனி தமிழரின் வாழ்க்கையையும் சமூகக் கட்டமைப்பையும் காண்போம்.

## தாய்வழிச் சமூகம்

காடுகளில் தனித்தனி இனக்குழுக்களாக ஆணும் பெண்ணும் வாழ்ந்து வந்த காலகட்டத்தில் இவ்விருவரின் இயற்கைப் புணர்ச்சியினால் பிறக்கும் குழந்தைகளைத் தாயே வளர்த்து வருகிறாள். இங்கிருந்து நாகரீகம் வளர்ச்சி அடைந்து குடும்ப அமைப்புகள், பேரரசுகள் என விரிந்த பிறகும் தமிழர்களின் வாழ்க்கை தாய் வழிச் சமூகத்தையே அடிப்படையாக கொண்டது இதனை,

"பசிஇல் ஆகுக பிணிசேண் நீங்குக

என வேட்டோளே யாயே யாமே"

இதனை, இவ்வாறு காட்சிப்படுத்துகிறது (Dhatchanamoorthi, 2005).

## நிலவியல் சார்ந்த சமூக கட்டமைப்பு

இயற்கையின் பரிணாம வளர்ச்சியால் தோன்றி மனிதன் இயற்கையோடே வாழ முற்பட்டவன். அதன் காரணமாக நிலத்தின் தன்மைக்கு ஏற்பவும் சூழலுக்கு ஏற்பவும் அங்கிருக்கும் கருப்பொருளுக்கு ஏற்பவும், தனது வாழ்வியலை மாற்றிக் கொண்டான். இயற்கையை தனது வாழ்க்கைக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளவோ அழிக்கவோ முயலவில்லை என்பதற்கான சான்றுகளே,

"முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்எனச்

சொல்லி முறையான் சொல்லவும் படுமே"

என்னும் தொல்காப்பியபாடல் (Mohanaraasu, 1986).

## இரு மைய நகரக் கட்டமைப்பு

மக்கள் இனிதே நல்வாழ்வு வாழ மன்னர்கள் ஆட்சி மற்றும் சமத்துவ வாழ்விற்கு என்று முற்றிலும் நகரமயமாக்கப்பட்ட ஒரிடத்தை ஆட்சிக்கான மையமாகவும், மக்கள் பொருளாதாரத்திலும் வாழ்வாதாரத்திலும் செழித்தோங்குவதற்கு முழுக்க முழுக்க வணிக மயமாக்கப்பட்ட துறைமுகங்களான மற்றொரு கட்டமைப்பு உருவானது என்பதற்கு,

"முத்துப்படு பரப்பின் கொற்கை முன்றுரை" (Puliyur kesigan, 2018)

"தீம் புகார்த்திரை முன்துறைமுகம்"

"யவனர் தந்த வினைமான் நன்கலம் வளங்கெழு முசிறி"

இவை போன்ற பாடல்கள் சான்று பகிர்கின்றன (Jeyabal, 2004).

இது வரையில் தமிழர்களின் சமூகக் கட்டமைப்பு சிலவற்றை ஆராய்ந்தோம் இனி தமிழர்களின் வாழ்வியல் பகுப்பு முறைகளைப் பற்றி ஆராய்வோம்.

## வாழ்வியல் பகுப்பு முறைகள்

தமிழர்கள் வாழ்க்கையை எப்படி வேண்டும் என்றாலும் வாழலாம் என்பதை மறுத்து இப்படித்தான் வாழவேண்டும் என்று உறுதி பூண்டு, தனது வாழ்வையே இரண்டு பிரிவுகளாக பிரித்து வாழ்ந்தவர்கள் தமிழர்கள். அதற்கான சான்றுகளே அகம், புறம் சார்ந்த இலக்கியங்கள் எனலாம்.

## அக வாழ்க்கை

தலைவன் தலைவி இருவரும் தன் உள்ளத்தால் உணர்ந்து, திளைத்து, அன்பால் வாழ்ந்து கழிக்கும் இல்லற வாழ்க்கை அகவாழ்க்கை என்று அழைக்கப்படுகிறது. அகம் என்றால் உள்ளம், வீடு என்று பொருள்படும். உள்ளத்தில் எழும் அன்பை அடிப்படையாக கொண்டு வீட்டினுள் வாழும் வாழ்க்கை நிகழ்வுகளை சங்க இலக்கியங்கள் அக இலக்கியங்கள் என்றுரைக்கிறது. இதில் காதலின் சிறப்பை,

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று

நீரினும் ஆர் அளவின்றே - சாரல்

கருங்கோல் குறிஞ்சிப்பூக் கொண்டு"

இப்பாடல் இவ்வாறு காட்சிப்படுத்துகிறது (Puliyur kesigan, 2008). மேலும், தான் வாழும் இல்லத்தின் சிறப்பை தாழ்ந்தாலும் உயர்வாய் என்னும் இல்லற மாண்பை,

"தேன் மயங்கு பாலினும் இனிய அவர் நாட்டு

உவலை கூவல் கீழ

மான் உண்டு எஞ்சிய கலிழிநீரே"

இவை போன்ற பாடல்கள் நமக்கு மெய்பிக்கின்றன (Puliyur kesigan, 2008).

கணவன் மனைவி உறவிற்கான அர்த்தம் புரிந்து வாழ்ந்தவர்கள் தமிழர்கள். அதனால் தான் பண்ணெடுங் காலத்திற்கு முன்பே கற்பு நெறி இருவருக்கும் உண்டு என வாழ்ந்து காட்டியவர்கள் தமிழர்கள் இதனை,

"இம்மை மாறி முதுமை ஆயினும்

நீ யாகியர் என் கணவனை

யாணாகியர் நின் நெஞ்சு நேர் பவளே"

பெண்ணின் கற்பிற்கு உள்ள அன்பை குறிக்கும் சான்றோர் ஆண்களுக்கும் கற்பு நெறி உண்டு என்பதை (Puliyur kesigan, 2008),

“பெருநிலம் கிளரினும் திருநல உருவின்

மாயா இயற்கைப் பாவையின்

போதல் ஒல்லாளென் நெஞ்சத் தானே”

இந்த பாடல் மெய்பிக்கிறது (Puliyur kesigan, 2018). மேலும், இன்று போல் இல்லை அன்றைய தமிழர் வாழ்க்கை பெண்மைக்கே இல்வாழ்க்கையை தேர்வு செய்யும் உரிமையில் இருந்து மொத்த வாழ்வும் அவளை சார்ந்தே இருந்துள்ளது. இன்று போல் ஆண் உயர்வு பெண்கள் தனது உரிமைக்கு போராடும் நிலையும் சுயமரியாதைக்கு போராடும் நிலையும் அன்று இல்லை. ஆண் பெண் இருவரும் மணம் பொருந்தி இல்வாழ்வில் வாழ்ந்துள்ளனர்.

இதனை,

“நீனிறப் பெருங்கடல் கலங்க வுள்புக்கு

மீன் எறி பரதவர் மகளே,

நீயே நெடுங்கொடி நுடங்கு நியம மூதூர்க்

கடுந்தேர்ச் செல்வர்க் காதல்மகனே”

இவ்வரிகள் எடுத்துரைக்கின்றன (Puliyur kesigan, 2018). திருமணம் என்ற சடங்கு ஏற்பட்டதற்கான காரணத்தை பண்பொடு எடுத்துரைக்கும் மாண்பினை உடையவர்கள் இவர்கள் என்பதை,

“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் என்ப”

தொல்காப்பியம் இவ்வாறாக பதிவுகிறது (Mohanaraasu, 1986).

வாழ்க்கைத்துணை வாழ்க்கையை நிர்ணயம் செய்கிறதோ. அதுபோல பிள்ளைப் பேறும் அவ்வாறே அமைகிறது. தமிழர்களின் சமூகக் கட்டமைப்பின் தொடக்கப் புள்ளியே தாய்மை தான் என்பதை முன்பே கண்டோம். பிள்ளைப்பேறு வாழ்வில் எத்தகைய பங்கு வகிக்கிறது என்பதனை,

“இம்மை உலகத்து இசையொடும் விளங்கி

மறுமை உலகமும் மறுவின்று எய்துப

செறுநரும் விழையும் செயிர் தீர் காட்சிச்”

அகநானூறு இவ்வாறாக நமக்கு விளக்குகிறது. அகவாழ்வின் பல்வேறு கூறுகளை இதுவரையில் ஆராய்ந்தோம் இனி புறவாழ்வின் சிறப்புகளைப் பற்றி காண்போம் (Jeyabal, 2004).

## புற வாழ்க்கை

இல்லத்தைவிட்டும், உடலின் வழியே வெளிப்படும் செயல்களையும் உள்ளடக்கிய வாழ்க்கை புறவாழ்க்கை எனலாம். இதில் பெண் ஆண் இவர்களுக்கான வீரத்தில் தொடங்குகிறது. ஆண்கள் மட்டுமே போர்க்களத்தில் அதிகம் சென்று போர்புரிகின்றனர். பெண்கள் போரிடவில்லையே எனக் கொள்ளுதல் தவறாகும். காரணம் பெண்களால் மட்டுமே இவ்வுலகம் சூழன்று கொண்டுள்ளதை அறிந்தவர்கள் அக்கால ஆடவர் எனவே தான் அவர்களின் இன்னுயிரை காத்து இவர்கள் களம் கண்டனர்.

## ஆடவரின் வீரத்தை புறம்

"உறுதுப் அஞ்சாது உடல் சினம் செருக்கிச் சிறுசொற் சொல்லிய சினங் கெழு வேந்தரை"

இவ்வாறு காட்சிப்படுகிறது (Balasubramanian, 2009). மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்றால் ஆளும் மன்னன் அன்புடையவனாகவும், நேர்மை மற்றும் நீதி உடையவனாகவும் இருக்க வேண்டும் என்பதை,

"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்

அதனால், யான் உயிர் என்பது அறிகை

வேல் மிகுதானை வேற்தற்குக் கடனே" (Balasubramanian, 2009)

என்றும்,

"நான்குடன் மாண்டது ஆயினும் மாண்ட

அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"

இவ்வாறாகவும் வழிமொழிகின்றனர் (Balasubramanian, 2009). மேலும், அக்கால மக்கள் அறப்போர் மேற்கொள்பவர்களாகவும் இருந்துள்ளனர். இதனை,

"ஆவும் ஆண்இயல் பார்ப்பன மாக்களும்

பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்

தென்புலம் வாழ்நர்க்கும் அரும்கடன் இறுக்கும்

எங்கோ, வாழிய குடுமி!"

இப்பாடல் நமக்கு காட்ச்சிப்படுத்துகிறது (Balasubramanian, 2009).

## வாழ்வியல் கூறுகள்

உலக மக்களிடை வேறுபாடுகள் காணப்படுவதற்கு காரணம் அவர்களின் வாழ்வியல் கூறுகளில் ஏற்படும் மாற்றங்களே காரணம் என்றால் மிகை இல்லை. சிறந்த வாழ்வியல் கூறுகளால் வாழ்வையே மேம்படுத்தியவர்கள் தமிழர்கள் என்பதற்கு அவர்களின் ஒற்றை பாடலே சான்று,

"போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை

பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்

அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை

அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்

செறிவு எனப்படுவது கூறியது மறாமை

நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை

முறை எனப்படுவது கண்ஓடாது உயிர் வௌவல்

பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்"

சங்க மக்கள் யாவரும் இவற்றை தனது வாழ்வியலின் அடிப்படை கூறுகளாகக் கொண்டு வாழ்ந்தனர் எனலாம் (Balasubramanian, 2007). மேலும், வாழ்வியலின் தத்துவத்தை உணர்ந்தவர்களும் இவர்களே எனலாம்.

உலகம் முழுமைக்கும் பொதுப்படையான வாழ்வியல் புரிதல்களை ஏற்படுத்தியவர்களும் இவர்களே என்றால் மிகை இல்லை.

அதனை,

“ஓர் இல் நெய்தல் கறங்க ஒர் இல்

ஈர்ந் தண் முழுவின் பாணிததும்ப

படைத்தோன் மன்ற அப்பண்பிலாளன்

இன்னாது அம்ம இவ்உலகம்

இனிது காண்க இதன் இயல்பு உணர்ந்தோரே”

இவ்வரிகள் காட்சிபடுத்துகின்றன (Balasubramanian, 2009). மேலும், வாழ்வின் நமக்கு ஏற்படும் வினைகளுக்கு இறைவனை பழி கூறாமல் நம் நடத்தையையே காரணம் என உணர்ந்திய புனிதர்கள் சங்கத்தோர்கள் என்பதற்கு சான்றே,

“தீதும் நன்றும் பிறர் தர வாரா”

என்னும் இவ்வொற்றை வரி, வாழ்க்கை சிறக்க வேண்டுமாயின் அதன் கூறுகளாக இவற்றை புரிந்துக்கொண்டு நடக்க வேண்டும் என்கின்றனர் (Balasubramanian, 2009). அதனை, நோதலும் தணிதலும் அவற்றோரன்ன சாதலும்

“புதுவதும் அன்றே வாழ்தல் இன்று என

ஆர் உயிர் முறை வழிப்படுஉம்

என்பதும் திறவோர் காட்சியின்

தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்

பெரியோரை வியத்தலும் இலமே!

சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே”

இதே பாடல், இவ்வாறாக காட்சி படுத்துகிறது (Balasubramanian, 2009).

## முடிவுரை

வாழ்வியல் கூறுகளான உணவு, உடை, இருப்பிடம் அனைத்தும் மாறுபடும் மயக்கம் ஏற்பட்டு ஆனால், தமிழர்களின் வாழ்வையும் வாழ்வியல் கூறுகளை காட்சிபடுத்த இவையே ஏற்றது. இதில்தான் மாற்றம் ஏற்படாது எத்தேசம் சென்றாலும் தமிழர் வாழ்வியல் என்றே கூறப்படும்.

## References


Avinashilingam, (1968) Kalaikalanjiyam, Tamil University, Thanjavur, India.

Balasubramanian, K.V. (2007) Kalithogai, New Century Book House, Chennai, India.

Balasubramanian, K.V. (2009) Purananuru, Paavai Publications, Thanjavur, India.

Dhatchanamoorthi, A. (2005) Ainkurunuru, New Century Book House, Chennai, India.

Jeyabal, R. (2004) Agananooru, New Century Book House, Chennai, India.

Mohan R. (2004) Pathupattu, NCBH Publications, Chennai, India.

Mohanaraasu, K. (1986) Tholkappiyamum, Thirukkuralum, Madras University, Chennai, India.

Nagarasan, V. (2007) Kurunthogai, New Century Book House, Chennai, India.

Puliyur kesigan, (2018) Nattrinai, Paari niliyam, Chennai, India.

Puliyur Kesikan, (2008) Kurunthogai Thelivurai, Paari Nilayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License